
www.padippakam.com

# சிந்தனை

ஆனி / ஆடி

இளைய வயதில்
உலகை வெறுத்தா
நிறங்களை உதிர்த்தன,
வண்ணத்துப் பூச்சிகள்?
புழுதி படாது
பொன் இதழ் விரிந்த
சூரிய காந்தியாய்,
நீர் தொடச்
சூரிய இதழ்கள் விரியும்
தாமரைக் கதிராய்,
நட்சத்திரங்களாய்
மறுபடி அவைகள் பிறக்கும்.

-- சேரன்.



SINTHANAI 3/90 JUNE/JULY 1990

படிப்பகம்

www.padippakam.com

**EDITORIAL***

Again, rivers of blood are flowing in the North-East province. Lakhs of people are made refugees and are facing starvation and living in fear of death. Chauvinist Srilankan government is waging the most brutal war in the North-East of Srilanka.

Anyone who knew about the fascist character of the Srilankan government and the " tigers", never expected that the clandestine discussions between them would bring about a solution to the problems of Tamils in Srilanka nor a permanent peace. When these "thugs" were engaged in "peace talks", there were no clashes between them; but elimination of their political opponents and humanrights violations, went on unabated. Bourgeoisie press boasted that the peace had returned. In the meantime both sides were preparing for a war. Today, reasons given by them for the present war are not the actual truths.

"Tigers" want to be the sole leaders of the Tamil people. In a situation in which full democratic and political rights are assured for the people and other political groups, it will be difficult for a single party rule to exist. It is only under an armed suppression, a

*(continued on inside backcover)*

---

* *Translation from Tamil.*

படிப்பகம்

www.padippakam.com

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

# சிந்தனை



ஆனி - ஆடி. 3/90 1990.

வட-கிழக்கு மாகாணத்தில் மீண்டும் இரத்த ஆறுகள் ஓடுகின்றன. இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக பட்டினியுடனும் பயத்துடனும் அவதிப்படுகின்றனர். ஸ்ரீலங்கா அரசின் பேரினவாத யுத்தம் முன் எப்போதையும் விட மிகக் கோரமான முறையில் இன்று முன்னெடுக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகள் மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வையோ அல்லது சமாதானத்தையோ தரப்போவதில்லை என்பதை, இந்த இரு பாசிச சக்திகளின் தன்மைகளை புரிந்த யாவரும் அறிந்திருந்தனர். "சண்டியர்கள்" பேச்சு வார்த்தையில் ஈடுபட்டபோது சண்டியர்களுக்கிடையில் "சமாதானம்" நிலவியதே ஒழிய, தங்களுக்கு அரசியல் ரீதியாக எதிரான சக்திகளை அழிப்பதும் ஜனநாயக மனித உரிமைகளை மீறுவதும் அவர்களினால் நிறுத்தப்படவில்லை. முதாலாளித்துவ சக்திகளும் அவற்றின் ஊதுகுழல்களும் சமாதானம் வந்துவிட்டதாகத் தம்பட்டமடித்தன. மறுபுறத்தில்



படிப்பகம்

www.padippakam.com

இரு தரப்பினரும் யுத்த தாயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்தனர். இன்று ஏற்பட்டிருக்கும் யுத்தத்திற்கு, இவர்கள் கூறும் காரணங்கள் உண்மையானவையுமல்ல.

மக்களும் மற்றைய அரசியல் குழுக்களும் பூரணமான சுதந்திரங்களை அனுபவிக்கும் ஜனநாயக சூழலில் புலி இயக்கத்தினர் தாம் தான், தமிழ் மக்கள் ஏகமனதாக ஆதரிக்கும் தலைவர்கள் என்பதை நிருபிப்பது கஷ்டமான காரியமாகும். ஆயுதரீதியான ஒடுக்கு முறையின் கீழேயே ஒரு தனி இயக்க சர்வதிகாரம் நடைபெற முடியும். இதனால் புலி இயக்கத்தினரின் அரசியல் நோக்கும் ஆயுதமும் பிரிக்க முடியாதவையாகவிருக்கின்றன. யுத்தபயத்தையும் ஆயுதத் தேவையும் ஏற்படுத்தும் அரசியல் அவர்களுக்கு அத்தியாவசியமாகவும் இருக்கின்றது. அவர்களுடைய ஏகாதிபத்தியத் தலைமைப் பீடங்களின் தேவைகளையும் அது பூர்த்தி செய்கின்றது.*

மறு புறத்தில் தமிழ் மக்களின் எந்த விதமான உரிமைகளையும் முழுமையாக அங்கிகரிக்க முடியாத ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு அவர்களை ஆயுதரீதியான ஒடுக்கு முறையின் கீழ் வைத்திருப்பதற்கும், பொருளாதார சீரழிவு ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலையில் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் எழும் முற்போக்கு எதிர்ப்புச்சக்திகளை ஆயுத ரீதியாக அழிப்பதற்கும், மக்களை உண்மையான பிரச்சனைகளிலிருந்து இனவெறிப்பிரசாரத்தால் திசை திருப்புவதற்கும் ஒரு ஆயுத

* "முதலாளித்துவ நெருக்குவாரம்" என்ற கட்டுரை பார்க்க.



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சி அத்தியாவசியமாகின்றது.

மக்களின் உரிமைகளையும், பொருளாதார விமோசனத்தையும் இந்த இரு பாசிச சக்திகளிடமிருந்து எதிர் பார்த்தவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள், ஏமாற்றப்படுவார்கள்.

இந்த இரு பாசிச சக்திகளையும் நிராகரித்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கும், நாடுபரந்த முற்போக்கு முன்னணியை உருவாக்குவதும் செயற்படுத்துவதுமே ஜனநாயக மனித சுதந்திரங்களையும் சமாதானத்தையும் பேணக் கூடிய மக்கள் செயற்பாடாக அமையும் என்பது எமது கருத்தாகும்.

## ஆளும்வர்க்கங்களின் தேவையை பூர்த்தி செய்பவர்கள்.

தமிழ்ப்பிரதேசங்களில் ஏற்பட்ட முற்போக்கு மாற்றங்களைத் தடுத்து நிறுத்துவதும், அதற்குத் தலைமை தாங்குபவர்களை அழித்தொழிப்பதும் தமிழ் ஆளும் வர்க்கங்களின் இன்றைய தேவையாக இருக்கின்றது. இந்தப் பகுதிகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை தடுத்து நிறுத்துவதில் சிங்கள முதலாளித்துவத்திற்கும் அக்கறையுண்டு. இந்த முதலாளித்துவ தேவைகளை நிறைவேற்றக்கூடிய இயக்கமாக ஏகாதிபத்திய ஆதரவுள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் இருக்கின்றது.

சிந்தனை - 4/89 - புரட்டாசி 1989.



படிப்பகம்



ஈழவிடுதலைப் போராட்டத்திற்காகவும் எமது மக்களின் சமூகமாற்றத்திற்காகவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்த தோழர்கள் புலிகளின் கொலைவெறிக்குப் பலியாகிவிட்டார்கள்.

தோழர் பத்மநாபாவும் மற்றைய பதின்மூன்று தோழர்களும் எதிர்ப்புரட்சிகர சக்திகளின் திட்டமிடப்பட்ட சதியினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் முதன்முதலாகத் துளிர்விட்ட ஒரு முற்போக்கு இயக்கத்தின் தலைமையை அழிக்க வேண்டியது சகல பிற்போக்கு சக்திகளுக்கும் அவசியமாகிவிட்டது.

தமது வாழ்க்கையை போராட்டத்திற்காக முழுமையாக அர்ப்பணித்த தோழர்களுக்கு வெறும் வார்த்தைகளினால் மட்டும் அஞ்சலி செய்ய முடியாது.

www.padippakam.com

அவர்களின் மரணங்கள் வெறும் இறப்புக்கள் அல்ல, ஒரு சகாப்தத்தின் திருப்பம். பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில், நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? போராட்டப்பாதை எது என்பதையும் அவர்களின் சமாதிகளின் தீபங்கள் என்றும் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கும்.

அவர்களுடைய விழிகள் மூடிவிடப் போவதில்லை. சிந்தனைகள் நின்றுவிடப்போவதில்லை. அவை என்றும் முற்போக்கு இதயங்களில் உயிர் பெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

மக்களின் நீண்ட போராட்டத்தில் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு ஏற்பட்டிருப்பது வெறும் நீர்குமிழி வெற்றிதான். இதனால் கொக்கரிக்கும் கொலைகாரர்களும், "அதிதீவிர கோசங்களுடன், மனிதாபிமான முகமூடிகளையும்" அணிந்து கொண்டு இந்தக் கொலைகளைக் கண்டிக்க மறுத்தும், திசைதிருப்பும் முயற்சிகளிலும் ஈடுபடும் கும்பல்களும் எதிர்புரட்சி சக்திகளின் முகவர்கள்தான் என்பதை, நாம் இனம் காண வேண்டியது இன்றைய போராட்டத்தில் அவசியமாகும்.

சகல மக்கள் விரோத எதிர்ப்புரட்சி சக்திகளுக்குமெதிரான போராட்டத்தில் எம்மை தொடர்ச்சியாக இணைத்துக் கொள்ள, இவர்கள் சிந்திய இரத்தத்தின் மீது சங்கர்ப்பம் செய்வோம். இதுவே எமது அஞ்சலிகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com



நாம், உலகப்படத்தில் சிறு புள்ளியாக இருக்கும் ஒரு இடத்திலே, போராட்டத்திற்கு அவசியமான தளத்தில் எமது கடமையை நிறைவேற்ற முடியுமானால், எம்மை ஆகக் குறைந்த அளவிலாவது - எமது உயிரை எமது தியாகத்தை - அதற்காக அர்ப்பணிப்போம்.

எமது கடைசி மூச்சை, எமக்குச் சொந்தமில்லாத ஒரு பூமிப்பகுதியில் விடவேண்டி ஏற்பட்டாலும், எமது இரத்தத்தினால் ஈரமாக்கப்படுவதனால் அதுவும் எமது பூமியாகிவிடுகின்றது.

பாட்டாளிவர்க்கப்பெரும் சேனையில் நாம் ஒரு சிறுபகுதிதான் என்பதையும், எமது நடவடிக்கைகளின் நோக்கங்கள் தெளிவானவை என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்...........

எமது போராட்டக்குரல் ஒரு செவியினாலாவது உள்வாங்கப்படுமானால், இன்னுமொரு கை எமது கருவிகளை எடுத்துக் கொள்ளுமானால், ஒலிக்கும் யந்திரத்துப்பாக்கிகளுடன் புதிய போராட்டக் குரல்களை எழுப்பி, வெற்றிக் கோஷங்களுடன் மரணகீதமிசைக்கும் எம்முடன் இணைய மக்கள் முன்வருவார்களானால், தீடீரென சம்பவிக்கப் போகும் அந்த மரணம், எவ்விடத்திலாவது வரட்டும். அதை வரவேற்போம்.

- சேகுவேரா



படிப்பகம்

www.padippakam.com

# உடனடியான யுத்தநிறுத்தம் வேண்டும்.

புரட்சிகர மார்க்சியக்கட்சி அறிக்கை.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்த சமாதானத்தையும் ஜனநாயக சுதந்திரங்களுள்ள வாழ்க்கையையும், கனவாக்கிவிட்ட ஒரு யுத்தத்தில் எல்.ரி.ரி. ஈ. யும் அரசும் இன்று ஈடுபட்டுள்ளன. இது எல்.ரி.ரி.ஈ.யினுடைய உண்மையான சொரூபத்தை வெளிக் காட்டியுள்ளதுடன், ஜனாதிபதி பிரேமதாசாவின் "பொப்பியுலிச" அரசியலின் பொய்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

ஆரம்பத்திலிருந்து சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் சந்தேகித்தபடி, ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் புலித்தலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற இரகசியப் பேச்சு வார்த்தைகளின் விளைவுகள் மனிதப்படுகொலைகளும் மோதல்களும் மட்டும்தான். இது தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலுள் இடைவெளிகளை மேலும் பெரிதாக்கியுள்ளது. எல்.ரி.ரி.ஈ. தலைவர்களின் பொய்யான வேடத்தினை நன்றாகத் தெரிந்து கொண்டு அதற்கேற்பத் தாளம் போட்ட இந்த அரசாங்கம்தான் இந்த யுத்தத்திற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். இன்றைய போரில் ஏற்படும் உயிரிழப்புகளுக்கும் அழிவுகளுக்கும்



படிப்பகம்

புலிகளை மட்டும் குறைசொல்லி இந்த அரசாங்கம் தப்பித்துக் கொள்ள முடியாது.

வடகிழக்கு மக்கள் மத்தியில் மற்றைய அரசியல் கட்சிகள் செயற்படுவதை தடைசெய்தும் அவற்றின் தலைவர்களை கொலைசெய்தும் வந்த எல்.ரி.ரி.ஈ. தலைமைகளின் கொடூரமான பாசிசத் தன்மையினை இந்த அரசாங்கம் அறியாதிருக்கவில்லை. அரசாங்கம், எல்.ரி.ரி.ஈ.யின் இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவுமளித்தது.

புரட்சிகர மார்க்சியக்கட்சி, எல்.ரி.ரி.ஈ.யினது கொடூரமான அரசியல் மூலோபாயத்தைக் கண்டிக்கின்றது. அதே சமயம் புலிஇயக்கத்தினரின் கொடும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் போர்வையில் சாதாரண தமிழ் மக்கள் கொல்லப்படுவதையும் கண்டிக்கின்றோம்.

அரசபடைகளினால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், சிங்கள இளைஞர்களுக்குச் செய்யப்பட்டதைப் போல டயர்கள் போட்டு எரிக்கப்பட்டதாகவும் அறிகிறோம். இப்படியான செய்கைகளின் பிரதிவிளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கும். கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோருகின்றோம்.

எல்.ரி.ரி.ஈ. ஐ தோற்கடிக்கும் நம்பிக்கையுடன் வளர்க்கப்படும் இனஒழிப்பு நடவடிக்கைகள்

www.padippakam.com

எல்.ரி.ரி.ஈ.யின் அரசியலைத் தோற்கடிக்க உதவமாட்டாது, மாறாக அவர்களின் அரசியல் மேலும் வளருவதற்கு அது உதவும். இதை அரசாங்கம் மட்டுமல்ல, பாராளுமன்ற எதிர்கட்சியினரும் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எல்.ரி.ரி.ஈ. மீதான ராணுவநடவடிக்கைகளுக்கு ஆதரவுதெரிவிக்க பாராளுமன்ற எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருப்பதானது, இந்த அரசாங்கத்தின் குருட்டுத்தனமான கொள்கைகளை மூடிமறைப்பதற்கும், மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மேலுள்ள கோபத்தை தாமும் பங்கு போடவுமே உதவியுள்ளது.

இந்த நாட்டு மக்கள், 125 அரசாங்க அங்கத்தவர்களுக்குப் பதிலாக 100 எதிர்கட்சி அங்கத்தவர்களை தெரிவு செய்தது, நன்மை தீமை பாராது அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டு ஆமாம் போடுவதற்காகவல்ல. மாற்றுத்திட்டங்களை முன்வைப்பதற்காகவே மக்கள் அவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள். தங்களுக்கு இருக்கும் எண்ணிக்கையைப் பாவித்து அவ்வாறு அவர்கள் செய்யாது இருப்பது, மக்கள் அவர்களுக்குக் கொடுத்த கட்டளைகளை நிராகரிப்பதாகும்.

நாட்டின் எந்தப்பகுதியிலுள்ள மக்களும் இன்று நடக்கும் போராட்டத்தினால் சந்தோஷப்பட முடியாது. ஜனநாயக விரோதமாகவும் ஒருதலைப்பட்சமாகவும் படுகொலைகளை ஆரம்பித்த எல்.ரி.ரி.ஈ. யினருக்கு எதிராக வடகிழக்கு மக்கள் மத்தியில் வளரும்



படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்புணர்வுகளுக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும். எதிர்கட்சியினரதும், இடதுசாரிகளினதும், மற்றைய முற்போக்கு அரசியல் கட்சிகள் குழுக்களினதும் கடமையிதுவேயாகும். அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் தயாராக இல்லை. அரசாங்கத்தினால் இதைச் செய்யவும் முடியாது என்பதையும் தமிழ் மக்கள் உணருகின்றார்கள். எல்.ரி.ரி.ஈ. அரசியலை இவ்வாறுதான் தோற்கடிக்கலாம். தமிழ் மக்களை வடகிழக்கில் அல்லது தெற்கில் ராணுவரீதியாக ஒடுக்குவதனால் இது சாத்தியமாகாது.

இன்று நடக்கும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு, தமிழ் மக்களைப் பாதிக்கும் சகல விடயங்களுக்குமான தீர்வுகள், அவர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் செய்யப்பட வேண்டுமெனக் கோரும் வெகுஜனநடவடிக்கைகளை, பாராளுமன்ற எதிர்கட்சிகளும், சகல அரச விரோத அரசியல் கட்சிகளும் குழுக்களும் எடுக்க வேண்டியது அவசியமாகும். இன்று நடைபெறுவது, தமிழ் மக்களின் விடுதலைக்காக எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்தும் 'கெரிலா' யுத்தமுமல்ல, அரசாங்கம் அதையடக்கச் செய்யும் போருமல்ல. இரு சாரரினாலும் பெரும் தொகையான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள் என்பதுதான் உண்மையாக இருப்பதனால் பின் வரும் கோரிக்கைகளை நாம் முன் வைக்கின்றோம்:



படிப்பகம்

www.padippakam.com

* வட கிழக்கில் நடைபெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

* அரசாங்கத்திற்கு எதிரான சகல சக்திகளும் இன்றுள்ள நிலைமைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

* அரச படைகளினால் கைது செய்யப்பட்ட சகல அப்பாவித்தமிழ் மக்களும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

* சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவை நாட்டிலுள்ள நிலைமைகளைப் பார்வையிடவும் உதவியளிக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

---


சிந்தனை

ஆரம்பம் 1985

ஆறு இதழ்களுக்கான வருடசந்தா 20 டி.எம். கீழ்கண்ட விலாசத்திற்கு 1 டி.எம். முத்திரைகளாகவோ அல்லது வங்கிகணக்கிற்கு அனுப்பிவைக்கலாம்.

BANK : Landesgirokasse, Stuttgart
Konto Nr : 3403185
Bankleitzahl: 600 501 01

SINTHANAI
ALBUCHWEG 8
7000 STUTTGART 1




படிப்பகம்

சிறுகதை

# வளரும் மரங்கள்

மல்லிகை சி. குமார்

"உங்க அப்பா இருக்காரா?"
"இல்லையே... அது டவுனுக்குப் பொயிரிச்சி."
"அவருட்டு மம்பட்டிய கொஞ்சம் எடுத்து தாவே..."
"சொந்தமா மம்பட்டி இல்ல... தொரக்கணக்கு மம்பட்டிதான் இருக்கு..."

ல்தோப்பின் ஒரு ஓரத்தில் இருந்த மண்வெட்டியை எடுத்து சிவத்திடம் கொடுத்தேன்.
அதை வாங்கி தோளில் வைத்துக்கொண்டு நிமிர்ந்து நின்றவனின் உருவம் ஒரு கம்பீரமாகத் தோன்றியது.

"ஆமா... ஒங்களுக்குத்தான் மரக்கறிக் தோட்டமில்லையே அப்ப எதுக்கு மம்பட்டி...?"

–நான் கேட்டதும் அவன் மெதுவாகச் சிரித்துவிட்டு,
"நீ இங்க கொஞ்சம் வாவே..." என்று லயத்து ஓரத்திற்கு அழைத்து போனவன்.
"அங்கப் பாரே... அந்த எடத்தத்தான் துப்பரவாக்கி தோட்டம் போடப் போறோம்..." என்று லயத்திலிருந்து சிறிது பள்ளத்தில் தெரியும் இடத்தை சுற்றிக் காண்பித்தான். அகண்ட இலைகளையுடைய 'சேமன்' செடிகள் தோப்பாக அங்கு மண்டிக் கிடந்தன.

"அட அந்த எடமா... அங்கேயா தோட்டம் போடப் போறீங்க? எதுக்கப்பா வீண் முயற்சி" என்றேன் நான்.

"அட ஒனக்கென்னாத் தெரியும். அந்த செடி' கொடிகளை எல்லாம் வெட்டி எடுத்திட்டா அங்க எவ்வளவுப் பெரிய தோட்டம் விழும் தெரியுமா? எல்லாம் நம்ம முயற்சியிலத்தான் இருக்கு...?

_அவனின் வார்த்தைகள் உறுதியாக இருந்தது. அதே நேரத்தில் சில இளைஞர்களும் அந்த இடத்தைக் நோக்கி மண்வேட்டியோடு இறங்கிக்கொண்டிருந்நார்கள்.

"அங்க கொஞ்சப்பேரு எறங்கிப் போறாங்களே அவுங்களும் அங்கத்தான் வேலை செய்யப்போறாங்களா?"
_நான் கேட்டேன்.

"ஆமா... ஒரு கூட்டு முயற்சியில் அங்க விவசாயம் செய்யப்போறோம். அதுல்ல கிடைக்கிறப் பணத்த நாம ஆரம்பித்திருக்கும் நூல் நிலையத்திற்கு செலவு செய்வதா முடிவு செய்திருக்கிறோம்" என்றான் சிவம்.

"ஓ.. அப்படியா ரொம்ப நல்லம்... ஆனா... அந்த இடத்தில் விவசாயம் செய்ய தோட்ட நிர்வாகம் அனுமதி கொடுத்திருச்சா...?

"நேத்து 'லேபர் டே' தானே நாங்கப் போயி துரைக்கிட்டக் கேட்டோம். முடிஞ்சா அந்த இடத்தைதுப்பரவாக்கி விவசாயம் பண்ணுங்கன்னு துரை முடிவுக்கொடுத்தப் பிறகுதான் இப்ப செயலில் இறங்கி இருக்கோம்..." என்றவன்' பள்ளத்திலுள்ளஇளைஞர்களை நோக்க "ஏய்ய்..." என்று கூப்பிட்டுவிட்டு "இரு நானும் வர்றேன்" என்பதை கைசாடையால் சொல்லி விட்டு...என்னைப் பார்த்துச் சிரித்தான்.

அந்த சிரிப்பில் ஒரு வெற்றியின் பெருமிதம்.

"வேலை எல்லாம் முடிஞ்சப் பொறவுதான் ஒங்கப்பாவுக்கு மம்பட்டிக் கெடைக்குமின்னு சொல்லிடு..." என்றபடியே லயத்திலிருந்து குறுக்குவழியாக அந்த பள்ளத்து சமநிலத்தை நோக்கி இறங்கி ஓடினான்.
நானும் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். இந்த பிற்பகலில்—ஒரு குறிக்கோளை வைத்து செயல்பட முனைந்திருக்கும் அந்த இளைஞர்களின் வேலை அங்கு—அந்த பள்ளத்து நிலத்தில் உதயமாகிக்கொண்டிருந்தது.

நான்— அவர்களில் ஒருவனான அந்த சிவத்தை நினைத்துப் பார்த்தேன். அவன் என்னிடம் தாராளமாகவே கதைப்பான்

சில நேரங்களில் அவன் தன் பேச்சை ஆரம்பிக்கும்போது...

"நாங்க கந்தப்பாலையில இருந்தப்ப" என்று ஆரம்பித்தான் என்றால்... அடுக்கடுக்காக சில நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டே போவான்.

"கந்தப்பாலையில ஒரு மொதலாளியோட நிலத்தில நாங்க வேல செஞ்சிக்கிட்டிருந்தோம... அப்பதான் வன்செயல் அங்கெல்லாம் வந்திச்சி...

காடையனுங்க தமிழான் கடைக்கெல்லாம் நெருப்பு வச்சிட்டானுங்க...

நாங்க இருந்த எடங்களுக்கும் நெருப்பு வச்சி..."


—கடந்தக் காலத்தில் ஆறாத்தழும்பாக மனதில் நிலைத்துவிட்ட அந்த நிகழ்ச்சிகளை சொல்லும்போது அவனின் கண்கள் கலங்கிவிடும்
"சிவம் ஒங்கை எல்லாம் நெருப்புக்காயம்பட்ட தழும்பு இருக்கே...?" என்று நான் கேட்டபோது'

www.padippakam.com

"இதுவா...?" சிறிதுநேரம் மௌனியாக இருந்தவன் மீண்டும் தொடர்ந்தான்.

"அதான் அந்த வன்செயல் டைம்ல..."

கந்தப்பால டவுனையே எரிச்சவனுங்க நாங்க குடியிருந்த எடத்தையும் நெருப்பு வைக்க வரப்போறானுங்கன்னு தெரிஞ்சி... பக்கத்தில் உள்ள காட்டுக்கு ஓடினோம். ஏன்னா நாங்க இருந்த எடத்தில நாலஞ்சி குடும்பம் இருந்தோம். அந்தக் குடும்பதிதில வயசுக்கு வந்த கொமரிகளும் இருந்திச்சி.



எங்க உயிருப் போனா பரவாயில்லன்னு அவுனுங்கள எதிர்த்து நிக்க முடியும். ஆனா... கொமரிப்புள்ளைகளை இழுத்து... எதாவது மானபங்கங்கள் செஞ்சிட்டா...

– இல்ல அந்த பாவிங்க அப்படியே செஞ்சிபுட்டா... அதனாலத்தான் அதுகளை காப்பத்தனுமின்னு ஓடினோம்.



படிப்பகம்

திடீரென்னு எனக்கொரு சந்தேகம்'
திரும்பிப்பார்க்கிறேன்... எங்கப் பாட்டியை காணோம். திரும்பி_

"அப்பா! பாட்டி முன்னுக்குப் போகுதா!"
முன்னாலப் போகும் அப்பாவை கூப்பிட்டுக் கேட்கிறேன்.
"ஆயாவைக் காணோமே...?" பதட்டத்தோடு அப்பா திரும்பி என்னை நோக்கி ஓடி வருகுது.

"அப்போ... நீ வராத ஆளுங்களோட ஓடிடு. நாப் போயிப் பார்த்திட்டு வர்றேன்..."

"வேணாண்டா... நீ வந்திரு' நாப் போறேண்டா... நாப் போயி ஆயாவைப் பார்த்து கூட்டிக்கிட்டு வர்றேன்!"
"வேணா... தங்கச்சி முன்னுக்கு ஓடுது அதப் பாத்துக்க..."

கத்திவிட்டு... நான் பாட்டியைத் தேடி திரும்பி ஓடுகின்றேன். அதற்குள் காடயர்கள் எங்களின் குடியிருப்புகளுக்கு தீ வைத்து விட்டு ஓடுகிறார்கள்.

"பாட்டி என்ன ஆனாளோ...?"
பதைபதைக்க ஓடிப்பார்க்கின்றேன்.

தீ வைத்த வீட்டிற்குள் எங்க பாட்டியின் அலறல்.
பாட்டியைக் காப்பாத்த வேணுமே.

துணிச்சலோடு வீட்டிற்குள் புகுந்து பாட்டியை வெளியில் இழுத்து வருவதே பெரும்பாடாகி விட்டது.

பாட்டியின் கால்களிலும் என் கைகளிலும் நெருப்புக் காயங்கள். எப்படியோ பாட்டியை இழுத்துக்கொண்டு ஓடினேன். தூரத்தில் உள்ள முதலாளி வீட்டிலிருந்து மரண ஓலங்கள். அந்த வீட்டை காடையர்கள் சூறையாகிக் கொண்டிருந்தார்கள்.

ஓடி வாப்பாட்டி...!

அட... வேகமா வாவே !

வயது சென்ற அந்த கிழவியால் என்னுடன் ஓடி வர முடியவில்லை. அவளுக்கு மூச்சு வாங்கியது. கொஞ்சதூரம் வந்தவள் நின்றுவிட்டாள்.

"அடே... செவம் நானும் ஒங்கக்கூட ஓடிவரத்தாண்டா நெனச்சேன். ஆனா இத ஆட்டுல விட்டுவிட்டுவர மனசுக் கேக்கல்ல. இத தேடி எடுக்கிறதுக்குள்ள... அந்தப் பாவிங்க வந்து..."

கிழவிக்கு பேச முடியாமல் மூச்சு வாங்கியது. அவள் தன் கையில் இறுக்கிப் பிடித்திருக்கும் சிறு பொலித்தீன் கூடு' அதற்குள் இருக்கும் அந்த கடதாசி?

_எனக்கு கிழவி மீது கோபமானக் கோபம்.

"சனியனே...! இந்த எழவுத்தான் இப்ப முக்கியமாக்கும்."_ அதை பிடுங்கி எறிய முயன்றேன். ஆனால் கிழவி இறுக்கமாக பிடித்துக் கொண்டாள்.

"போடா...எத்தனை வருஷமா இதக் காப்பாத்திக்கிட்டு வர்றேன். இந்த சிட்ஷன் கார்ட்டு இல்லன்னா நாம இங்க இருக்குறதுக்கே அத்தாட்சி... இல்லாமப் பொயிருண்டா' இந்த சிட்ஷன் எடுக்க நானும் உங்க தாத்தாவும் எங்கெங்க அலைஞ்சிருக்கோந் தெரியுமா..."_அவள் மூச்சுவாங்க மூச்சுவாங்கப் பேசினாள்.

'அந்த எழவை எல்லாம் பேசிக்கிட்டு இருக்க இப்ப நேரமில்லை... நீ ஓடி வா..."_ கிழவியின் கையைப் பிடித்து இழுத்தேன். தீக்காயம் பட்ட என் கைகள் காந்தல் எடுத்தது.

அடோ ! தூரத்தில் சிலர் எங்களை நோக்கி சத்தமிட்டனர். இன்னும் கொஞ்சம் கணங்கினால் அவர்கள்ஓடிவந்து எங்களை தாக்கினாலும் தாக்கலாம். எனவே_ கரடு முரடான அந்தப் பாதையில் கிழவியை இழுத்துக்கொண்டே ஓடினேன்.

"காலு எரியிதிடா..."_ அவளின் முனங்கல்... ஓடி வரவே அவளுக்கு ஜீவனில்லை. கிழவியின் நிலை எனக்கு பரிதாபமாக இருந்தது.

"இன்னும் கொஞ்ச தூரம்' கொஞ்ச தூரம்தான்..." அவளுக்கு தைரியமூட்டி கொண்டே.... தொங்கு.... தொங்கின்னு வரும் அவளை இழுத்துக்ககாண்டு....

"அய்யோ...! –அவள் அலறினாள். குத்தாக நின்ற கல்வில் அவளின் கால் இடிபட்டு என் பிடியிலிருந்து நழுவி அவள் விழுந்தாள்.

"பாட்டி...!"

அவள் கீழே.... கீழே.... உருண்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

"அடோ...!!" கூச்சலிட்டவாறு அந்த காடையர்கள்என்னை நோக்கி ஓடி வரவும். கிழவியை அனாதையாக விட்டு விட்டு நான் காட்டை நோக்கி ஓடினேன். எங்கே உயிருக்கும் ஆபத்து வருமோ...? மூச்சுவிடக்கூடப் பயந்தபடி... அந்தக் காட்டில் அட்டைக்கடியோடு.... அன்னந் தண்ணீ ஆகாரமில்லாமல் ரெண்டு நாட்கள் கிடந்திட்டு... மெதுவாக இறங்கி வந்தோம். எனது கையின் தீக்காயத்தில் அட்டைக் கடித்து மேலும் வேதனையைக் கொடுத்தது. அதை பொறுத்துக் கொண்டேன். பாட்டி விழுந்த இடத்திற்கு வந்தோம். வீச்சம் எடுத்தது. காக்காய்கள் பறந்துகொண்டிருந்தன.

"அந்தா...! அந்தா...!! அங்க...!"

கிழவி ஒரு பாறை மீது குப்புற விழுந்து கிடந்தாள். கிட்டத்தில் போய் நானும் அப்பாவும் பார்த்தோம். அவள் கையில் அந்த சிட்டிஜன் கார்டு அப்படியே இறுக்கி பிடித்தவாறே இருந்தது.

பாவம்... 'இந்த நாட்டு பிரஜைகள்'ன்னு எங்க குடும்பத்து வழக்கப்பட்ட அந்த பத்திரத்தை காப்பாத்திய கிழவியை எங்களால் காப்பாத்த முடியவில்லை. "நாசமாப் போன இந்த கடுதாசியாலத் தானே எங்க ஆயா செத்திச்சி..." ஆத்திரத்தோடு அவள் பிடியிலிருந்த சிட்டிஜன் கார்டை உருவி கிழித்தெறியப் போனார் அப்பா.

"வேண்டாங்கப்... பாட்டி கடைசி வரைக்கும் இது மேலத்தான் உயிரையே வச்சிருந்தா..."
–நான் தடுத்துவிட்டேன்.

அந்த பயங்கர சம்பவத்துக்குப் பிறகு நாங்க அந்த பகுதியிலேயே இருக்கல்ல. அங்க' இங்க அகதிகளாக இருந்து– கடைசியில இந்த தோட்டத்துக்கு வந்து சேர்ந்திட்டோம் என்ற சிவம் தன் இரண்டு கைகளையும் நீட்டிப் பார்த்துவிட்டு....

இந்த கைகளில மட்டுமா தழும்பு இருக்கு? மனசுலேயும் அது ஆழமா பதிஞ்சுக் கிடக்கே...!" என்றப் போது... அதில் ஒரு வைராக்கியத் தன்மையும் வெளிப்பட்டது.

அவன் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லும்போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். அவன் சொல்லும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு சிறுகதையாக....

அவன் சொன்னவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது.... ஒரு நல்ல சிறுகதை தொகுப்பை வாசித்த உணர்வே எனக்கு ஏற்படும்.

சிவம்... இந்த தோட்டத்தில் நிரந்தரமாக்கப்பட்ட ஒரு தொழிலாளியல்ல. அகதிகள் என்ற காரணத்தால் தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒரு "கெஷிவல்" தொழிலாளி. இங்கு வந்து இரண்டு வருடமாகிறது இன்னும் அதே நிலைதான். இருந்தாலும் இங்குள்ள சில இளைஞர்களுடன் சேர்ந்து சமூக அபிவிருத்தி வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் இளைஞர்கள் மத்தியில் இவனுக்கொரு மதிப்பு. அந்த இளைஞர்களில் மத்தியில் ஒருவன் தான் சிவத்தின் தங்கையையும் பதிவுத் திருமணம் செய்துகொண்டான்.

நான் மீண்டும் அந்த பள்ளத்து சம நிலத்தை நோக்கினேன்– அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களிற் அந்த உழைப்பு இங்கு ஒரு நூல் நிலையத்திற்கு பயன்படப் போகிறது எனப் பெருமைப்பட்டேன்.

ஒரு வாரம்....' எனக்கே வியப்பாக இருந்தது. சிவம் சொன்னது போல செடி' கொடிகளை எல்லாம் அழித்து அந்த பள்ளத்து சமநிலத்தில் ஒரு பெரிய தோட்டத்திற்கான இடத்தை அவர்கள் அமைத்திருந்தார்கள்.

"இப்ப என்னா சொல்லுற... எங்க முயற்சி எப்படி? நீயுந்தான் பரீட்சை எழுதிட்டு வீட்டில இருக்க ஒன்னா முடியுமா?

மண்வெட்டியை திருப்பிக் கொடுக்க வந்த சிவம் என்னிடம் சவால் விட்டான்.

"ஆமா சிவம் நான் கூட நினைச்சிப் பார்க்கல்ல' என்னமோ சேமன் செடி நெறைஞ்ச தோப்புத்தானேன்னு நினைச்சேன்' ஆனா அப்ப ... அது ஒரு நல்ல விவசாய பூமி..." என்றநான்...
"ஆமா சிவம்... நீங்க அங்க விவசாயம் செய்ய தொடங்கின பிறகு பன்றிகள் யேதும் வந்து தோட்டத்த அநியாயம் பண்ணினா...
சந்தேகத்தோடு கேட்டேன்.

"பண்டியா அதெல்லாம் அங்க வரமுடியாது. அப்படி அதுங்க வந்தா....... குத்திக் கொல்லறதுக்கு எப்படி எப்படி ஈட்டி செஞ்சி வச்சிருக்கோம் தெரியுமா?" – அவனின் வார்த்தைகள் வீராவேகமாக ஒலித்தது.

"ஆமா முதல்ல என்னாப் போடப் போறீங்க"

"ராபு... அதன் பிறகு தான் கோவா. எப்படியும் நாலாயிரம் கோவா கன்னு வைக்கலாம்" பெருமையாக சொன்னவன்'

"நாளைக்கி நாங்க ராபு... அதான் முள்ளங்கி விதைப் போடப் போறோம் என்று சொல்லிவிட்டு' என் கையிலிருந்த புத்தகத்தை வாங்கி புரட்டிப் பார்த்தான் பின்.
"ஏங்கிட்ட மேதின வரலாறு புத்தவம் இருக்கு நாளைக்கி கொண்டு வாரேன்..." என்று சொல்லி விட்டு ஓடினான்.

ஆனால் மறுநாள் காலையில்

"ரவ்வு வந்து பிடிச்சிக்கிட்டுப் பொயிட்டாங்களாம்" பீலிக் கரைக்குப் போய் வந்த அம்மா ரகசியமாக அப்பாவிடம் சொன்னாள். அது எனக்கு கேட்டது.

"யாரம்மா...பிடிச்சிக்கிட்டுப் பொயிட்டாங்க..." நானும் மெதுவாகவே கேட்டேன்.

www.padippakam.com

"அதான்... அந்த செல்வத்த...போலீஸ் ஜீப் வந்து ஏத்திக்கிட்டுப் பொயிருச்சாம். பாவம்... அந்த பொடியன்..." அம்மா அனுதாபப்பட்டாள். எனக்கோ இருப்புக் கொள்ளவில்லை.

"இரும்மா வர்றேன்..." என்று சொல்லிவிட்டு நாலைந்து லயங்களுக்கு அப்பால் உள்ள சிவத்தின் வீட்டிற்கு ஓடினேன்.

வீட்டு வாசலில் துக்கம் விசாரிப்பது போல சிலர் நின்று கொண்டிருந்தார்கள்.

"ஏம் மவன என்னா செய்ய போறாங்களோ...? சிவத்தின் தந்தை வாய்விட்டு அழுது கொண்டிருந்தார்.

"அப்படி ஒண்ணும் செஞ்சிட மாட்டாங்க ஒம் மகே... தோட்டத்து பொடியன்களை வளைச்சி என்னென்னமோ நடத்த தயாரா இருக்கான்னு பொலீசுக்கு பெட்டிஷன் பொயிருக்கு அதான் வந்து சந்தேகத்தில கொண்டுப் பொயிருக்க... நீ ஒண்ணும் அழுவாத..."

தோட்டத்து தலைவர் அவருக்கு ஆறுதல் சொல்லுறார்.

"என்னாத் தலைவரே ரவ்வுத்தான் நான் பார்த்துக்கிட்டு இருந்தேனே. பொலீசுத்தான் இந்த வீட்ட சோதிச்சி... பண்டிக்குத்துற ஈட்டிய எல்லாம் பயங்கர ஆயுதமின்னு... ஜீப்பில தூக்கிப் போட்டிச்சி அப்புறம் கொஞ்சம் பொல்தவம்..."

ஒரு சாட்சியாளைப் போல பக்கத்து வீட்டுக்காரன் சொன்னான்'

"ஆமாசாமி.... அதெல்லாம் ஏம்மவன் பண்டிக்குத்த பைப்வல அடிச்ச ஈட்டித்தான்... பயங்கடுர ஆயுதமில்ல" அவர் அழுகையோடு சொன்னார்.



படிப்பகம்

"சரி...சரி... அழுவாத நீ மொகத்த கழுவிட்டு ஓம் மவனோட அடையான அட்ட.. பொறந்த சட்டிப்பிக்கேட்...எல்லாம் எடுத்துக்கிட்டு என்னோட... நம்ம யூனியன் ஆபிசுக்கு வா...அங்க வச்சி பேசுவோம்..." என்றார் தலைவர்.

"அதுக்கெல்லாம் நா... எங்கசாமி போவேன். அதெல்லாந்தான் அந்த கந்தப்பாளையில எரிஞ்சி சாம்பளாப் பொயிருச்சே... இப்ப... எங்க ஆயா காப்பாத்தி வைச்ச கிட்டிஷன் கார்டு மட்டுந்தான் இருக்கு... மத்தெல்லாம்..." அவர்கையை விரித்துக் கொண்டு அழுவதைப் பார்க்க எனக்கும் அழுகை வருவதாக இருக்கிறது.

அன்று யாருமே தோட்டத்தில் வேலைக்கு போகவில்லை. அன்று முழுவதும் தோட்டத்தில் ஒரு சாவு நிகழ்ந்தது போன்ற நிலைமை.

"நாளைக்கி எல்லாரும் வழமை போல வேலைக்குப் போங்க.... இந்த சிவம் விஷயமா நான் போன் பண்ணி மத்தியக் கமிட்டியோடப் பேசினேன். அவுங்க பாதுகாப்பு மந்திரியோட நேரிடையாப் பேசுருங்களாம். அதுனால தோட்டத்தில எந்தக்கரைச்சலும் செய்யாம வேலையை செய்யுங்க..." இவ்வாறு மாவட்டப்பிரதிநிதி தோட்டத் தலைவரிடம் சொன்னதை அந்த தலைவர்... அப்படியே அன்று மாலை தோட்ட மக்களிடம் வந்து ஒப்புவித்தார்.

மறுநாள்...

வழமையைப் போல தோட்டத்தில் வேலை நடந்தது.

அதற்கு அடுத்த நாள்....

நான் லயத்தோரத்தில் நின்றவாறு... அந்த இளைஞர்கள் தோட்டம் போடுவதற்காக சுத்தம் சய்திருக்கும் அந்த பள்ளத்து சமநிலத்தை நோக்கினேன்.

அங்கே....

அடுத்த டிவிஷனில் இருந்து டெக்டர் மூலம் கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகளை சில தொழிலாளர்கள் நாட்டிக் கொண்டிருந்தார்கள்....
"ஏது...இந்த பயிலுக விவசாயம் பண்ணுறதுக்கு துப்பரவாக்கிய நெலத்தில மரம் நாட்டுறுங்க போல இருக்கே"

"ஆமா...மரந்தான் நாட்டுறுங்க. அந்தமாதிரி எடத்திலயாரும் வெவசாயம் பண்ணக்கூடாதாம். அங்கயெல்லாம் மரங்களைத்தான் வளர்க்ககனுமின்னு கவுருமெண்டே உத்தரவுப் போட்டிருக்காம்..."
"ஓ...அப்படியா?"
"ஆமா இந்த பயிலுங்க யாரும்... அங்க மரக்கன்னு நாட்டக் கூடாதின்னு சவுடால் பேச முடியாது. அப்படி பேசினா...அந்த செவம்பயலுக்கு நேர்ந்த கதிதானாம். நம்மத் தொரையும் இப்பக் கண்டிப்பா உத்தரவு போட்டிருக்காரு...

"என்னான்னு ?"

"முன்னமாதிரி பொடியனுங்க தோட்டத்திலக் கூட்டம் போடக் கூடாது. நூல்நிலையம் வேணும்' இது வேணுமின்னு தொரையை கரச்சல் பண்ணக்கூடாதாம். ஏன்னா...ஏதோ ஒரு பயங்கரவாதி கச்சிக்கும்_ இந்த பொடியன்களுக்கும் தொடர்பு இருக்குமோன்னு தொரை சந்தேகப்படுறாரு."

லயத்துக் கோடியில் நின்று இரு கிழடுகள் பேசிக்கொள்வது என் செவிகளில் தெளிவாக விழுகின்றது.

ஓ... அப்படி என்றால் இங்கு இந்த இளைஞர்கள் அடக்கப்பட்டு விட்டார்களா?

www.padippakam.com

இந்த இளைஞர்களிற் முயற்சிகள் எல்லாம் தளர்ந்து விட்டனவா...? எனக்கு கவலையாக இருக்கிறது.
அங்கே...அந்த பள்ளத்தில் மரங்கள் நாட்டப்படுகின்றன. நாளை அவைகள் செழித்து வளரும்.
ஆனால் இந்த இளைஞர் சமுதாயம்..?

நன்றி: கொழுந்து.

---

## இலங்கையர் சங்கம்

மேற்குஜேர்மனி இலங்கையர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 26.05.1990 அன்று பிராங்க்போர்ட் நகரில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் குறிப்பாக இலங்கையர்சங்க கடந்தகால நடவடிக்கைகள், எதிர்கால ஆலோசனைகள் என்பன கலந்துரையாடப்பட்டன. அடுத்து ஒரு வருடத்திற்கான செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இலங்கையாக மலையகமக்களை திருப்பியனுப்ப எடுக்க இருந்த நடவடிக்கையை எதிர்த்து ஜனாதிபதிக்கு ஒரு மனு அனுப்புவதென்ற தீர்மானத்துடன் அன்றைய கூட்டம் முடிவடைந்தது.

இலங்கையாரக்கும்- புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை எதிர்க்கும்முகமாக 13.07.90 அன்று பொன் நகரில் இலங்கையர் சங்கத்தினரால் ஒருநாள் உண்ணாவிரதம் நடாத்தப்பட்டது. அவ் உண்ணாவிரதத்தில் இலங்கையர்சங்க அங்கத்தவர்கள் உட்பட ஏனையோரும் கலந்துகொண்டனர்.

உண்ணவிரதத்தின்போது அழிவுகளுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் தமிழ், சிங்களம், ஜெர்மன் மொழிகளில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அன்றைய தினம், இலங்கை ஜனாதிபதிக்கும், மேற்குஜெர்மனி வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்புவதற்கென கீழ்கண்ட கோரிக்கைகளுடன் கூடிய இரு மனுக்களில் பொதுமக்களிடம் கையெழுத்துகள் பெறப்பட்டன.

தொடர்நடவடிக்கையாக 20.07.90 அன்று முன்சன் நகரில் தகவல் நடுவம்

(37ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

# 8 வது இலக்கியச்சந்திப்பு

இலக்கியச்சந்திப்பின் எட்டாவது நிகழ்ச்சி எசன் நகரில் ஜூன் மாதம் 9ம் திகதி நடைபெற்றது. கிரேபீல்ட் இலக்கியச் சந்திப்புக்குழுவில் காணப்பபட்ட சில குறைபாடுகளும், நிகழ்ச்சி நேரங்களின் போது காணப்பட்ட தொய்வும் இந்த நிகழ்ச்சியில் காணப்படாதது திருப்தியளித்தது. மேலும் குழுவுக்குத் தெரிவு செய்யப்பப்பட்டவர்கள் இணைந்து (?) செயலாற்றியதும், செயற்குழு அறிக்கைகளும் கணக்கு விபரங்களும் பங்கு கொண்ட அனைவருக்கும் அறிவிக்கப்பட்டதும் சிறப்பான நடைமுறைகளாகும். தொடரும் நிகழ்ச்சிகளிலும் இந்த நடைமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

வாசகர் விமர்சன நிகழ்ச்சியை இன்னும் வாசகர்கள் முழுமையாகப் பாவிக்காத நிலமையே இன்னும் காணக் கூடியதாக இருக்கின்றது. அதிகமான வாசகர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள முன்வரவேண்டும்.

வாசகர் விமர்சனம், ஆசிரியர்கள் ஆக்கதாரர்கள் பதில்கள் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, "உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூக சமகால வளர்ச்சி" என்ற தலைப்பில் இரு கட்டுரைகள் வாசிக்கப்பட்டன, மதிய போசனத்திற்குப்பின் "மலையக மக்களும் நாங்களும்" என்ற கட்டுரை வாசிக்கப்பட்டது. கனமான இந்தக் கட்டுரைகளின் கலந்துரையாடலின் போது அதிகமான வாசகர்கள் கலந்து கொண்டமை, இலக்கியச்சந்திப்பில் பங்கு கொள்ளுபவர்களின் சமூகப் பிரக்ஞைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருந்தது.

ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகளில் வெளியான கவிதைகள் மீதான கண்ணோட்டத்தை, முருகதாஸ் முழுமையாகச் செய்ய முயற்சித்தார். இருவர் செய்யவிருந்த நிகழ்ச்சியை ஒருவர் மட்டும் செய்ய நேர்ந்ததால் சில குறைபாடுகள் தென்பட்டன. இவரையடுத்து, காங்கேசன் கோவிந்தகுமாரின் கவிதைகளை விமர்சித்த சுசீந்திரனின் பேச்சிலும் கவிஞர் ஏற்றுக் கொள்ள வேண்டிய பல உண்மைகள் இருந்தன.

அடுத்த இலக்கியச் சந்திப்பை 'ஆலன்' நகரில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.■



படிப்பகம்

www.padippakam.com

1987ல் ஏற்பட்ட மூலதனப்பங்குச் சந்தைகளின் வீழ்ச்சியானது* முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஏற்படவிருந்த பாரதூரமான பின்னடைவுகளுக்கு முன்னடையாளமாக இருந்தது. 1987ல் ஏற்பட்ட வீழ்ச்சியின் அதிர்வுகளிலிருந்து சர்வதேச முதலாளித்துவப் பொருளாதாரம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டதினால், அது நிரந்தரமான குழப்பநிலையிருந்து மீண்டுவிட்டது என்ற எண்ணங்களை ஏற்படுத்தியுள்ளது. "திட்டமிட்ட பொருளாதாரங்களை கொண்டிருந்த கம்யூனிஸ்ட்" நாடுகளில் ஏற்பட்ட சீரழிவுகள், இந்த எண்ணங்களுக்கு மேலும் வலுவூட்டின. முதலாளித்துவப் பொருளாதாரம் வெற்றிவாகை சூடிவிட்டது என்ற பிரசாரம், இன்று ஜேர்மனியில் உச்சக் கட்டத்தையடைந்துள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இந்த

* 1987 ஒக்டோபர் 19 திகதி சர்வதேச மூலதன பங்குச்சந்தையில் பங்குகளின் விலைகள் திடீர் என வீழ்ச்சியடைந்தன. அமெரிக்க பங்குதாரர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் $1,000,000 மில்லியன்( மில்லியன் = பத்து லட்சம்) டாலர்களாகும். முழு ஏகாதிபத்திய முதலாளிகள் $1.5 றில்லியன் ( 1.5 x 1,000,000,000,000 )டாலர்களை இழந்தனர். மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளிடம் பெற்றுள்ள கடன் தொகைகளிலும் பார்க்க இது 50% அதிகமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சிக்கான காரணங்களையும் அதன் வரையறைகளையும், 'சோசலிச சயுற்றுங்'(Sozialistische Zeitung - 7.6.90) பத்திரிகையில் வெளிவந்த இந்தக்கட்டுரை ஆராய்கின்றது.

வின்பிரட் வூல்ப்

# முதலாளித்துவ நெருக்குவாரம்

முதலாளித்துவ பொருளாதாரத்தின், (உச்சலாபக்கட்டம், பின்னடைவு, குழப்பம், மீட்சி, உச்சஇலாபம்.... என்ற) வியாபாரச் சுழற்சி முறை இன்னும் மறைந்து விடவில்லை. ஜேர்மானிய பெரும் வியாபார ஸ்தாபனங்களுக்காக இயங்கும் ஜேர்மன் பொருளாதார நிலையத்தின் ஜூன் 1989 அறிக்கை இதற்கு சான்று பகருகின்றது.

1960ல் இருந்து பொருளாதார வளர்ச்சியை ஆய்வு செய்த இந்த அறிக்கையில், வியாபாரச் சுழற்சியானது இன்னும் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தொடருவதை தடுக்க முடியாமல் இருப்பதை குறிப்பிட்டுள்ளது. பொதுவான பொருளாதார வளர்ச்சி இன்னும் வழமைபோலவே .... மீட்சி, உச்சலாபம், பின்னடைவு, குழப்பம்... என்ற ரீதியிலேயே தொடருகின்றது.



படிப்பகம்

## முதலாளித்துவப் பொருளாதாரச் சுழற்சி

முதலாளித்துவம் செழுமைக்காலங்களில் அதிகமான பொருட்களைச் சந்தையில் குவிக்கின்றது. ஆனால் உற்பத்திக்கு ஏற்றளவு மக்களுக்கு ஊதியம் கொடுக்கப்படாதபடியால் பொருட்கள் முழுவதையும் வாங்கிக் கொள்ளும் கொள்வனவுச்சக்தி அவர்களிடம் இருப்பதில்லை. இதனால் பொருட்கள் விற்பனையாகாமல் சந்தையில் தேங்குகின்றன.

பொருட்களின் விற்பனை குறைவதால் முதலாளிகள் உற்பத்தியைக் குறைத்து தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குகின்றனர். இது மேலும் கொள்வனவுச் சக்தியைக் குறைப்பதனால் குழப்ப நிலை மேலும் அதிகரிக்கின்றது. வேலை இல்லாமையும் பட்டினியும் மக்களை வாட்டுகின்றன. மக்களின் கொள்வனவுச் சக்தியைக் கருத்திற் கொள்ளாது இலாபத்தையே கருத்திற் கொண்டு உற்பத்தி செய்யும் முதலாளித்துவப் பொருளாதாரக் குழுப்பநிலையின் உச்சக்கட்டமே இதுவாகும்.

வியாபார வீழ்ச்சியினால் ஏற்பட்ட நட்டங்களைத் தாங்கிக்கொள்ள முடியாத சிறிய தொழில் ஸ்தாபனங்கள் வங்குரோத்தடைகின்றன. 1930களில் ஏற்பட்ட பொருளாதாரக் குழப்பங்களில் பல சிறு முதலாளிகள் தற்கொலை செய்து கொண்டனர். இந்தக் குழம்பிய நிலையிலிருந்து மீழுவதற்கு முதலாளித்துவ அரசுகள் புதிய சந்தைகளைப்பிடிப்பதற்கு மற்றைய நாடுகளுடன் போர் தொடுக்கின்றன. இதனால் ஏற்படும் ராணுவத் தளபாடங்களின் உற்பத்தி முதலாளிகளுக்கு புதிய இலாபங்களைக் கொடுக்கின்றது. வேலையில்லாத பாட்டாளிகள் போர்களத்தில் மடிகின்றார்கள்.

சிறிய ஸ்தாபனங்களின் சீரழிவுகளும்' புதிய சந்தைகளும் பெரும் முதலாளிகளின் இலாபங்களை மீண்டும் அதிகரிகச் செய்கின்றன. மக்களின் பட்டினியாலும் சாவினாலும் முதலாளித்துவம் மீண்டும் தனக்கு ஒரு சுபீட்சமான காலத்தை ஆரம்பிக்கின்றது.

***** 'முதலாளித்துவப் பொருளாதாரம்': சிந்தனை - 2/86. ஆனி 1986. *****

இன்றைய சூழ்நிலைமைகளில் கழற்சியின் எந்தக்கட்டத்தில் நாம் இருக்கின்றோம் ?

கிழக்கு ஜேர்மனியை மேற்கு ஜேர்மனி இணைத்துக் கொள்வதனால் ஏற்படக்கூடிய பொருளாதாரத்தாக்கங்கள் என்ன ?

இந்த இரு கேள்விகளும் பலரின் மத்தியிலும் எழுகின்றதை நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது.

மேற்கு ஜேர்மனியின் வியாபாரச் கழற்சியை, 1948ல் இருந்து நோக்குமிடத்து, இது ஒவ்வொரு கழற்சியும் சராசரியாக ஐந்து வருடங்கள் நீடித்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அண்மையில் ஏற்பட்ட கழற்சியே அதிக காலம் ( 1976 இல் இருந்து 1982/3 வரை) நீடித்திருந்தது. இன்றைய கழற்சிக் காலமும் நீடித்துக் கொண்டு செல்லுகின்றது. ஏழாவது வருடம் முடிந்து எட்டாவது வருடம் தொடருகின்றது. சரித்திர ரீதியாக இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

கடந்த நூற்றாண்டில் 12 வருடங்கள் நீண்ட கழற்சிகளும் ஏற்பட்டன. எனினும் சிலர் இதனால் திகைப்படைந்துள்ளனர்.

## 2KR வாய்ப்பாடு

இதற்கான பதிலை „2 K R வாய்ப்பாடு" மூலம் கொடுக்கலாம். "2KR" என்பது ஜேர்மன் மொழியில் ( Kredit, Krieg, Rüstung ) "கடன், போர், யுத்தத்தளவாடங்கள்" என்பதாகும்.

உலகத்தில் கொடுக்கப்படும் கடன்களின் தொகையை அதிகமாக்குதல், இந்த அதிகரிப்பை செயற்கையாகச் செய்தல்; தொடர்ந்த ஈரான்/ஈராக் போரினால் ஏற்பட்ட விசேஷமான தேவை(கேள்வி)கள், உலக எண்ணைய் விலையின் வீழ்ச்சியும் பல நாடுகள் தம்மை ஆயுதரீதியாகப் பலப்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் - இவைகள் இந்த வியாபாரச் கழற்சி நீளுவதற்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன.

www.padippakam.com



## போர்.

ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையிலான யுத்தம் அவர்களின் 'பெற்றோல் டாலர்களை' மேற்கு நாடுகளுக்கு கொண்டு செல்ல உதவியது. ஏழு வருடங்கள் நீடித்த யுத்தத்தில் 250 பில்லியன் ** டாலர்களுக்கு மேற்கு நாடுகளிடமிருந்து ஆயுதங்கள் வாங்கப்பட்டன. இதில் இவற்றின் அயல் நாடுகள், முக்கியமாக சவுதி அரேபியா தமது தேவைகளுக்காக வாங்கிய ஆயுதக் கொள்வனவுகள் அடங்கவில்லை. இதே நேரத்தில் ஈரானும் ஈராக்கும், அவற்றிற்கு ஆதரவளித்த நாடுகளும் யுத்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எண்ணெய் உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரித்தன.

இதன் விளைவு உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தது. எண்ணெய் விற்பனை நாடுகளின் -விலைகளைக்



---

** பில்லியன் = 1,000,000,000 (நூறு கோடி)



படிப்பகம்

கட்டுப்படுத்துவதற்கான - ஒன்றியமான "ஒப்பெக்" ( OPEC) வலுவிழந்தது.

1982க்கும் 1989க்குமிடையில் முக்கியமான OECD நாடுகளான ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா ஆகியவை 500 பில்லியன் டாலர்களை எண்ணெய் விலைவீழ்ச்சியால் கொள்வனவில் ஏற்பட்ட இலாபத்தினாலும் ஆயுத வியாபாரத்தினாலும் பெற்றுக் கொண்டன. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் குழப்ப நிலையைத் தடுக்கும் திட்டத்திற்காக பல்லாயிரக்கணக்கான மக்களின் இரத்தம் சிந்தப்பட்டது. டயிமலர், சப், வொல்வோ ( Daimler, Saab, Volvo) ஆகிய கம்பனிகள் போரில் ஈடுபட்டிருந்த இரு பகுதியினருக்கும் ஆயுத விற்பனை செய்தனர். அமெரிக்க உளவுப்பிரிவினரும் இதற்கு உதவிசெய்தனர். மேற்கு நாடுகள் விரும்பிய விதத்தில் இந்த போர் அதிக வருடங்கள நீடிக்கவில்லை! இன்று இன்னுமொரு போரை உருவாக்கும் விதத்தில் இரு நாடுகளுக்கும் ஆயுத விற்பனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1980களிலிருந்து மேற்கில் ஆயுத செலவினங்கள் அதிகரித்துள்ளன. 1981க்கும் 1990க்குமிடையில் அமெரிக்காவின் ஆயுதச் செலவுகள் 300பில்லியன் டலர்களாக உயர்ந்தது. மேற்கு ஜேர்மனியில் அது 50%மாக உயர்ந்தது. இந்தப் பத்து வருடங்களில் ஆயுதச்செலவுகள் 1,100 பில்லியன் டலர்களால் அதிகரித்தது.

இதுவும் முதலாளித்துவப் பொருளாதாரத்தை குழப்ப நிலையிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

பெரும் கம்பனிகளிற்கு அரசு பெரும் கொள்வனவு கட்டளைகளை கொடுத்துள்ளதுடன், ஜெனரல் மோட்டோர்ஸ், போர்ட்,

டயிம்லர், பி.எம்.டபிள்யு ( General Motors, Ford, Daimler, BMW) போன்ற கம்பனிகளின் தொழிற்சாலைகள் பெருமளவு ஆயுதத் தொழிற்சாலைகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் லாபங்கள் நிச்சயப்படுத்தப்படுகின்றன. முதலாளிகள் எந்தவிதமான நஷ்டங்களுக்கும் முகம் கொடுக்கத் தேவையில்லாதுள்ளது. தொழிலாளர் மற்றும் ஏழை மக்கள் மீது விதிக்கப்படும் வரிகளினாலும், மக்களுக்கான சமூகநலதிட்டங்களுக்கான செலவினங்களை குறைப்பதினாலும் அத்துடன் வங்கிகடன்களினாலும் இந்த நடவடிக்கைகளுக்கு அவசியமான பணம் பெறப்படுகின்றது.

## வங்கிக்கடன்கள்.

"சேமிப்பு", "பழமையான பொருளாதாரக் கொள்கை" என்பன போன்ற வார்த்தை ஜாலங்களுக்குப் பின், எல்லாவிதமான வங்கிக்கடன்களையும் பெற்று பொருளாதாரக் குழப்ப நிலை ஏற்படுவதை தாமதப்படுத்துவதே முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

அமெரிக்காவின் உள்நாட்டுக்கடன், 1980களில் 914 பில்லியனிலிருந்து 1990ல் 3000 பில்லியன் டலர்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்கு ஜேர்மனியில் இக்காலத்தில், வங்கிக்கடன் 560 பில்லியன் டலர்களிலிருந்து 1400 பில்லியன் டலர்களாக உயர்ந்துள்ளது.

கடந்த பத்து வருட காலத்தில் உலகின் முதன்மையான கடன் கொடுக்கும் நாடாக இருந்த அமெரிக்கா, உலகின் மிகப் பெரிய கடன்கார நாடாக மாறியுள்ளது. 1990ல் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கடன் 400 பில்லியனாக உயர்ந்துள்ளது. (உலகின் அதிக கடனாளியான மூன்றாமுலக நாடான பிரேசிலின் வெளிநாட்டுக்கடன் 120 பில்லியன் மட்டும்தான்.) மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் ( உ+ம். இத்தாலி,

கிறீஸ் ) அரசுகளின் கடன்கள் பயங்கர ( வங்குரோத்து அடையும்) நிலமைகளில் இருக்கின்றன.

இந்த மூன்று காரணிகளும் காலவரையின்றித் தொடர முடியாது. கடன்களுக்கு வட்டி, கூட்டு வட்டி எல்லாம் கொடுக்க வேண்டியுள்ளது. ஈரானும் ஈராக்கும் இன்று வங்குரோத்து நிலைமைகளில் இருக்கின்றன; இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அதிக உயர்ந்த ராணுவ செலவை கொண்டிருக்கும் இந்த நாடுகள் அவற்றைக் குறைக்கும் நிலையிலும் இல்லை.

இந்த விசேஷகாரணிகள் மாற்றமடைந்தால், உச்சலாபம் பெறும் காலகட்டம் முடிவுக்கு வருமா ? ஆம் என்றும் இல்லை என்றும்தான் பதில் சொல்ல வேண்டும்! மூன்று ஏகாதிபத்திய நாடுகளில் பொருளாதாரக் குழப்பங்களுக்கான அடையாளங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. அவை அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா ஆகும். 1989 முதல் மூன்று மாதங்களுடன் 1990 முதல் மூன்று மாதங்களையும் ஒப்பிடும் பொழுது அமெரிக்கத் தொழில்களின் இலாபங்களில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது அமெரிக்காவின் முதன்மையான தொழிலான மோட்டார்கார் உற்பத்தியில் ஏற்பட்டுள்ளது. இதே போன்ற அடையாளங்களை இங்கிலாந்திலும் காணக் கூடியதாக இருக்கின்றது. தட்சரின் அரசாங்கம் குழப்பங்களை எதிர் நோக்குகின்றது.

ஜப்பானின் பலம் பொருந்திய 'ரோக்கய்' வங்கியைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஒருவர் 'டி சயிற்' பத்திரிகையில், "ஜப்பான் ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர் நோக்குகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். குழப்ப நிலைக்குப் பல காரணிகள் இருந்தாலும் மூலதனப் பங்குச்சந்தையின் நிச்சயமற்ற தன்மையே முக்கியமானதாகத் தென்படுகின்றது.

www.padippakam.com

ஜப்பானின் (ரோக்கியோ) மூலதனப் பங்குச் சந்தையில் விலைகள் மற்றைய இடங்களிலும் பார்க்க அதிகமாகவே இருந்தன. ஆனால் இந்த வருடம் அதன் திடீர் வீழ்ச்சி பாரதூரமானதாகவே இருக்கின்றது. 1990 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மே மாதம் 15 திகதிக்கிடையில் , ரோகியோ மூலதன சந்தையிலுள்ள பங்குகளின் மதிப்பு 25% தினால் குறைந்தது. ஜூன் மாத ஆரம்பத்தில் அவற்றின் மதிப்பு, 1989 இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 20% குறைவாகவே இருந்தது.

## ஒரு ஜேர்மனி

அதே சமயம் "வால் ஸ்ரீட்" (அமெரிக்கா), இலண்டன், ரோக்கியோ ஆகிய இடங்களிலுள்ள முதலாளித்துவப் பெரிய குருக்களையெல்லாம் ஒரு புதிய பயம் பீடித்துள்ளது. இரு ஜேர்மனிகளின் இணைவானது, ஒரு சிறிதுகால இடைவெளிக்குப் பின், ஜேர்மனியை பொருளாதார ரீதியாக மிகப்பலம் பொருந்தியதாக ஆக்கிவிடும் என்ற அச்சமே அதுவாகும். இது அவர்களிற்கு இடையிலான போட்டிகளை கூர்மைப்படுத்தும். இதனால் பொருளாதார இழப்பு ஏற்படப்போவது அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்குமேயாகும். பிரித்தானியாவும் பாதிக்கப்படும். ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டிலிருக்கும் நாடுகள் - சுவிற்சலாந்து, ஆவுஸ்திரியா உட்பட - ஜேர்மனியின் வளர்ச்சியால் நன்மை பெறலாம்.

நாம் மனிதாபிமானமாக நோக்கும் பொழுதுதான் இரு ஜேர்மனிகளின் இணைவானது (வேலையில்லாமை, வாழ்க்கைதர வீழ்ச்சி ஆகியவற்றை உண்டாக்குவதனால்) கேடுவிளைவிப்பதாக உள்ளது. ஆனால் முதலாளித்துவ பொருளாதார இலாப நோக்குடன் பார்க்கும் பொழுது இந்த இணைவு அவர்களுக்கு நன்மையாகவே இருக்கின்றது. இந்த இணைவினால், கிழக்கு



படிப்பகம்

ஜேர்மனியில் 20 அல்லது 30 இலட்சம் தொழிலாளர்கள் தமது வேலைகளை இழக்கப் போகிறார்கள். இவர்களில் அதிகமானவர்கள் பயிற்றுட்ட தொழிலாளர்கள்.

இது மேற்கு ஜேர்மன் தொழிலாளர்கள் தமது கூலி உயர்வுக்காகவும் சமூக உதவிகளுக்காகவும் முன்வைக்கும் கோரிக்கைகளையும் (போராட்டங்களையும்) மட்டுப்படுத்தும். தொழில்நுட்ப வல்லுனர்கள் கூட இதிலிருந்து தப்ப முடியாது. தொழிலாளர்களின் கூலிகளில் பெரும் வீழ்ச்சி ஏற்படும். முதலாளிகளின் இலாபங்கள் பெருகும். மேற்கு ஜேர்மனியின் மூலதனத்திற்கும், தொழிற்சாலைகளின் விற்பனைப் பொருட்களுக்கும், கிழக்கு ஜேர்மனி புதிய சந்தையாக அமைகின்றது. இந்த நிலைமை சுமார் குறைந்தது ஒரு வருடத்திற்காவது நீடிக்கலாம்.

இலாபங்கள் சுமார் இரு வருடங்களுக்கு நீடிக்கலாம். இதன் அர்த்தம், 1960களில் ஏற்பட்டது போல உலக முதலாளித்துவ வியாபாரச் சுழற்சி இரு பிரிவுகளாக ஏற்படலாம். பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் முதலாளித்துவ குழப்பநிலமை ஏற்படும் பொழுது ஜேர்மனியிலும் அதைச் சூழ உள்ள நாடுகளிலும் முதலாளித்துவ வளர்ச்சியும் இலாபங்களும் தொடரும். ஆனால் இதன் முடிவு வெகுதூரத்தில் இல்லை. மேற்கு ஜேர்மன் முதலாளித்துவம் கிழக்கு ஜேர்மனியை ஒட்டுண்ணி போல பற்றிக் கொண்டு, தமது தேவைக்கமைய முதலீடுகளை செய்து கொண்டிருந்தால், மேற்கு ஜேர்மனியின் நீண்டு கொண்டிருக்கும் இலாபவளர்ச்சிக் காலம் சிறிதாகத்தான் இருக்க முடியும்.

இரு ஜேர்மனிகளின் இணைந்த ஜேர்மனியினால் (பணத்தை) 'மார்க்கு'களின் ஏற்படப் போகும் பெரும் மதிப்பை 1:1 சமமாக்கியது,

www.padippakam.com

பணவீக்கத்திற்கு இட்டுச் செல்லும். கிழக்கு ஜேர்மனியில் செய்யப்படவிருக்கும் முதலீடுகள் முழுமையாக வங்கிக்கடன்கள் மூலமாகவே செய்யப்படவிருக்கின்றன. இது நீண்டகாலத்தில் வட்டி வீதங்களை அதிகரிக்கச் செய்யும். இவை இறுதியான குழப்ப நிலைமைக்கு இட்டுச் செல்லும்●

இலங்கையர் சங்கம்.
(25 பக்கத் தொடர்ச்சி)

ஒன்று நடாத்தப்பட்டு, அங்கும் பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்பபட்டன.

ஜனாதிபதிக்கு அனுப்பட்ட மனுவிலிருந்த கோரிக்கைகள்.

1. மக்களுக்கு இழப்புகளையும். அழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இம்மோதல்கள் இலங்கையரசினாலும், எல்.ரி.ரி.ஈ.யினாலும் நிறுத்தப்படவேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

2. தென்னிலங்கையிலும், மலையகத்திலும் அரசினால் நடத்தப்படும் படுகொலைகள் உடனே நிறுத்தப்படவேண்டும்.

3. அகதிகளுக்கும், காயமடைந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

4. உணவு, மருத்துவ, போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டு, அனைத்து வினியோகங்களும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

5. கைதுகள் நிறுத்தப்படுவதுடன், கைதானவர்கள் உடனே விடுவிக்கப்படவேண்டும்.

6. செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைச் சங்கங்கள் ஆகியன பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிடவும், பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நிவாரணங்கள் வழங்கவும் அனுமதி வழங்கப்படவேண்டும்.

7. மலையக மக்களை கட்டாயமாக நாடு கடத்துவதை கைவிடவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் முதலாளித்துவ கூட்டுமுன்னணியா ?[1]

1990 மே தினம் அண்மித்த போது ஐக்கிய சோசலிச முன்னணியில் வெடிப்புக்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. முக்கிய முதலாளித்துவக்கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றிற்கு மாற்றுக்கட்சியாகவே இந்த முன்னணி உருவாக்கப்பட்டது. சிங்கள பேரினவாத சக்திகளுக்கெதிராக ஒரு செயற்திட்டத்தை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் நிலைமையிலும் அது இருந்தது.

கூட்டுமுன்னணிகளின் கசப்பான பாடங்கள்.

எனினும் 1990 மே தினத்திற்கு முன் ஐ.சோ.மு. பிளவுபட்டது. கம்யுனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாசக்கட்சியும், 1960 – 1970 களில் கூட்டுமுன்னணி அரசாங்கத்தினால் பெற்ற கசப்பான பாடங்களை மறந்து, முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன்

## நீல் விஜயதிலக + எஸ்.கந்தசாமி

1. நான்கவது அகிலத்தின் ஆங்கில ஏடான "இன்டர்நாஷனல் வியுபொயின்ட்"ல், நவசமசமாசக்கட்சி தோழர்களினால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

கூட்டுமுன்னணி அமைக்கும் நோக்கங்களைக் கொண்டிருந்தன. ஐ.சோ.மு யின் இடதுசாரிகள் இதை எதிர்த்ததினால் மேதினத்தில் ஐ.சோ.மு.க்கட்சிகள் வெவ்வேறு ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தின.

பழைய இடதுசாரிக்கட்சிகளான ல.ச.ச.கட்சியும் கம்யுனிஸ்ட் கட்சியும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஸ்ரீல.ம.க(வி)யினரும் ஒரு மேதினக் கூட்டத்தை நடாத்தினர். நவசமசமாச கட்சியும் ஸ்ரீலங்காமக்கள் கட்சியும் வெவ்வேறு மேதின ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தினார்கள். இந்தக் குழப்பங்களை முதலாளித்துவப் பத்திரிகைகள் தமக்குச் சாதகமாகப் பாவித்து தொழிலாளர்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தின.

ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளே இன்றைய குழப்ப நிலைமைகளுக்கான உடனடிக் காரணமாக அமைகின்றன. ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரணதுங்கா கொலை செய்யப்பட்ட பின்பு ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரும் நிலைப்பாடுகளை எடுக்கத் தொடங்கியது. நவசமசமாசக்கட்சியும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் இதற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்தன. இதனால் இந்த இரு கட்சிகளும் 1988 ஜனாதிபதித் தேர்தலில் ஓசி அபயகுணவர்தனாவை இடதுசாரி அபேட்சகராக நியமித்தன. யு.என்.பி. யின் ஒடுக்குமுறைக்கும் ஜே.வி.பியினரின் பேரினவாதக் கொலைவெறிக்கும் எதிராக தமிழ்பேசும் மக்களின் உரிமைப்போராட்டமாகவும் இந்தத் தேர்தல் அமைந்தது.

ஜனாதிபதித் தேர்தல்'



படிப்பகம்

பிற்போக்கு பேரினவாத சக்திகளுக்கும் இடதுசாரிசக்திகளுக்குமிடையிலான பகிரங்க மோதலாகவே அமைந்தது.

ஜே.வி.பி.யினரால் இடதுசாரி அபேட்சகரின் கூட்டங்கள் தாக்கப்பட்டதுடன் பல இடதுசாரிகள் கொலையும் செய்யப்பட்டனர். நவசமசமாசக்கட்சி மத்தியகுழு அங்கத்தவர் சந்திரவிமல முதலாவது பிரசாரக்கூட்டத்தில் ஜே.வி.பி.யினரின் குண்டுத்தாக்குதலினால் கொல்லப்பட்டார். ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த தேவபண்டார இன்னுமொரு கூட்டத்தில் ஜே.வி.பி.யினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். நவசமசமாசக்கட்சியின் பொதுச்செயலாளர் டாக்டர்.விக்கிரமபாகுவும் படுகாயமடைந்தார்.

இந்தப் பின்னணியில் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாசக் கட்சியும், உண்மையில் சுதந்தரக்கட்சித் தலைவியான பண்டாரநாயக்காவை ஆதரித்துக் கொண்டு, ஒசி அபயகுணசேகராவை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டனர். இதனால் ஐக்கிய சோசலிச முன்னணியை ஆதரித்தவர்கள் குறிப்பாக, ஸ்ரீலங்கா கம்யுனிஸ் கட்சியில் நம்பிக்கையிழந்ததில் ஆச்சரியமில்லை. தொழிலாள வர்க்கம் 1960 – 70 களில் கூட்டு அரசாங்கத்தினால் ஏற்பட்ட அனுபவங்களை சுலபத்தில் மறந்து விடமுடியாது. ஒரு காலத்தில் பலம் பொருந்தியவையாக இருந்த பழைய இடதுசாரிக்கட்சிகள் தமது கூட்டரசாங்கக் கொள்கையினாலேயே பலவீனமாகின.

ஸ்ரீல.க.கட்சி’ ல.ச.ச.கட்சி ஆகியவற்றின் தளங்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதாக மாறின. லங்கா சமசமாசக் கட்சியினுள் மிதமாக இருந்த(2) வர்க்க உணர்வுள்ள சக்திகள் ஸ்ரீ.ல.சு.கட்சியுடனான கூட்டை எதிர்த்து போராடியதுடன்’ பின்பு வெளியேறி நவசமசமாசக்கட்சியை அமைத்தனர். ஸ்ரீ.ல.சு.கட்சியில் இணைந்திருந்த இடதுசாரி எண்ணம் கொண்டவர்கள் பிரிந்து சென்று’ 1983ல் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை அமைத்தனர்.

1988 ஜனாதிபதித்தேர்தலில் மக்கள் சுதந்திரமாகப் பங்கு கொள்ள முடியாமல் இருந்தது. ஜே.வி.பி.யினரின் பகிஷ்கரிப்புப் போராட்டம் யு.என்.பி. அபேட்சகரின் வெற்றிக்கு வழிவகுத்தது. இந்தத் தேர்தலில் 50%மான மக்களே வாக்களித்தனர்.( 1982ல் 80%மானோர் வாக்களித்தனர்.) பிரேமதாசாவுக்கு 25%மான வாக்குகள் கிடைத்தன. ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி இந்த சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கித் தனது வழக்கமான கூட்டுமுன்னணி நிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கியது. 1989 கம்யூனிஸ்ட் கட்சிமகாநாட்டில்’ ஐக்கிய சோசலிச முன்னணியானது ஒரு முறையான அரசியல்மாற்றிடாக அமையாததால்’ ஸ்ரீ.ம.மு.யுடன் ஒரு யு.என்.பி.விரோத முன்னணி அமைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அடிமட்ட அங்கத்தவர்களின் எதிர்ப்பைத் தவிர்ப்பதற்காக யு.என்.பி. எதிர்ப்புப் போராட்ட அணியாக மட்டுமே இது இருக்கும் எனவும் கூறப்பட்டது

2. 1964ல் கூட்டுஅரசாங்கக் கொள்கையை எதிர்த்து ல.ச.ச.கட்சியிலிருந்து வெளியேறிய ட்ரொக்கியவாதிகள் நாங்காவது அகிலத்தின் இலங்கைப்பிரிவான ல.ச.ச.க (இடது) என்ற கட்சியை ஆரம்பித்தனர். இது பின்பு ‘புரட்சிகர மார்க்சியக்கட்சி’என பெயர் மாற்றம் பெற்றது. - சிந்தனை

www.padippakam.com

1989ல் சிங்கள குட்டிமுதலாளித்துவசக்திகளின் எழுச்சிகள் உச்சமடைந்தன. அரசியல் எதிரிகளைக் கோரத்தனமாகக் கொலை செய்வதுடன் ஆரம்பமாகிய இயக்கம் நகரப்பகுதிகளுக்கு (வேலைநிறுத்தம்' ஹர்த்தால் போன்ற) 'தொழிலாளர்நடவடிக்கைகளாகப்' பரந்தது. இந்த நடவடிக்கைகள்' ஜே.வி.பி.யினால் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டன. எனினும் பலவிடங்களில் (உதாரணமாக போக்குவரத்து வேலைநிறுத்தத்திற்கு) தொழிலாளர்களின் சுயநடவடிக்கைகளும் காரணமாக இருந்தன. இந்த நிலைமைகளில் ஆளும்வர்க்கங்களும் அரசபடைகளும் நிலைகுலைந்திருந்தன.

பிரேமதாசவின் அரசாங்கம் பொறியும் தருவாயில் இருந்தது. முதலாளித்துவவர்க்கம் செய்வதறியாது தப்பும் வழிகளைத் தேடியது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இந்தியவமைதிப்படை நிலைகொண்டிருந்ததும்' வட-கிழக்கில் புதிய மாகாணசபையில் ஆட்சியிலிருந்த இடதுசாரி ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் அரசிற்கெதிரான நடவடிக்கைகளும்' அரசாங்கத்தின் பிரச்சனைகளை இன்னும் அதிகமாக்கின.

பிரேமதாசாவின் அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கையிழந்து வருகிறார்கள் என்பது தெளிவாகியது. சகல முதலாளித்துவ சக்திகளும்' முன்னைய பிரதமரும் எதிர்கட்சியின் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிப்பொறுப்பை எடுக்க வேண்டுமென உந்தினர். ஜே.வி.பி.' எல்.ரி.ரி.ஈ.' உட்பட



படிப்பகம்

சகல எதிர்கட்சிகள், குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்ற ஜனநாயக அமைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்ட தற்காலிக அரசாங்கம் ஒன்றை, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்காக மட்டும் அமைக்க வேண்டுமென நவசமசமாசக்கட்சி அழைப்பு விடுத்தது. இந்தப் பணிக்காக ஒரு தற்காலிக அமைப்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். ஆனால் ஐக்கிய சோசலிச முன்னணியிலிருந்த சீர்திருத்தவாதிகள், பாராளுமன்றத்தினுள் இருக்கும் அரசியல் கட்சிகளைக் கொண்ட தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தனர். இதற்கு ஸ்ரீ.ல.சு.கட்சியும், யு.என்.பி.யிலுள்ள சில பகுதியினரும் ஆதரவு தெரிவித்தனர்.

யு.என்.பி. அரசாங்கத்தைத் தூக்கியெறியும் முயற்சிகளில் ஈடுபடாமல், சீர்திருத்தவாதிகள் பிரேமதாசாவின் சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றினர். இது பிரேமதாசாவின் அரசாங்கம் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், கிராமிய குட்டிமுதலாளித்துவ எழுச்சியை அடக்கவும், சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்ளவும் உதவியது. தள்ளாடிக் கொண்டிருந்த அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததினால் ஸ்ரீ.ல.சு.கட்சியினுள் பாரிய குழப்பநிலை ஏற்பட்டது. அன்றிருந்த சூழ்நிலைமைகளில் யு.என்.பி. அரசாங்கம் வீழ்ச்சியடைந்திருந்தால், ஸ்ரீ.ல.சு.கட்சியிலும் பார்க்க இடதுசாரிகளே அதிகநன்மை பெற்றிருப்பார்கள் என்பதை சுதந்திரக்கட்சித் தலைமைகள் உணர்ந்திருந்தன.

ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கிய யு.என்.பி. அரசாங்கம், அதனால் சமாதானத்தை ஏற்படுத்த

முடியும் என நிருபிக்க முயற்சித்தது. இந்திய ராணுவத்தின் வெளியேற்றத்துடன்' எல்.ரி.ரி.ஈ.யுடன் சமாதான நடவடிக்கைகளை செய்து கொண்டதுடன்' மற்றைய தமிழ் இடதுசாரிக்குழுக்களைப் பாதுகாப்பிற்காக இந்தியாவிடம் தங்கியிருக்கச் செய்ததுடன்' சர்வதேசிய நாணய நிதியத்திடமிருந்து மேலதிக கடன்களையும் பெற்றுக் கொண்டது.

மக்களைக் கவர அரசின் திட்டங்கள்.

நம்பிக்கையிழந்திருந்த பரந்த மத்தியதர வர்க்கத்தினரின் நம்பிக்கையைப் பெறுவதற்காக' அரசாங்கம்' 'ஜனசவிய' என்ற வறுமை ஒழிப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி கிராமிய மக்களுக்கு சலுகைகளுடன் கூடிய கடன்களையும்' சில இடங்களில் காணிப்பங்கீடுகளையும் செய்தது. பலராலும் விமர்சிக்கப்பட்ட அவசரகாலவிதிகள் சில மீளப்பெறப்பட்டன. அரசசேவையிலும் கூட்டுத்தாபனங்களிலும் ஊழல்களை நீக்குவதுடன் வேலைவாய்ப்புகள் தகுதி மற்றும் இனவிகிதாசார அடிப்படையில் கொடுக்கப்படுமென அறிவித்து உலகமதிப்பைப் பெற முயற்சித்தது.

ஆனால் தொழிலாளர்களுக்கெதிரான எந்த அவசரகால விதியும் அகற்றப்படவில்லை. வேலைநிறுத்தங்கள்' மறியல் போராட்டங்கள்' வேலைத்தலங்களில் கூட்டம் கூடும் உரிமை ஆகியவற்றின் மீதான தடைகள் அகற்றப்படவில்லை. பணவீக்கத்தின் அதிகரிப்பும் உண்மைக்கூலியின் வீழ்ச்சியும் தொடர்ந்தன. தொழிலாளர்கள் கூலி உயர்வுக்கான போராட்டங்களுக்கு தயாராக இருக்கின்றார்கள் என்பதையும்

அரசாங்கம் உணர்ந்திருந்தது.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு மந்திரியான ரஞ்சன் விஜயரத்னா' நவசமசமாசக்கட்சிப் பிரதிநிதியான வாசுதேவ நாணயக்காரா தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து அரசாங்கத்தை கவிழ்க்க முயற்ச்சிக்கிறார் என குற்றம் சாட்டினார். பரந்த அரசாங்க விரோதப் போராட்டங்கள் குறைந்த மட்டத்தில் இருந்தாலும் தொழிலாள வர்க்கத்தின் போராட்ட முனைப்புக்கள் முன்னேற்றமடைந்துள்ளன.

பிரேமதாசாவின் அரசாங்கம் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டதானது' ஸ்ரீ.ல.சு.கட்சியினுள்ளும் இடதுசாரி இயக்கத்தினுள்ளும் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. ஸ்ரீ.ல.சு.கட்சியின் அடிமட்டத்திலுள்ளவர்கள்' அவர்களின் வலதுசாரித்தலைமைகளின் சந்தர்ப்பவாதப் போக்கால்' குறிப்பாக அனுரா பண்டாரநாயக்காவில் வெறுப்படைந்துள்ளனர். அவரின் தாயாரான கட்சித்தலைவி' வயதுமுதிர்ச்சியாலும் அடுத்தடுத்து வந்த தோல்விகளாலும் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றார்.

முதலாளித்துவ வர்க்கத்தின் நம்பிக்கையை மட்டுமல்லாமல் தொழிலாளிகள்' மத்தியதரவர்க்கத்தினர்' தமிழ்மக்கள் ஆகிய சகல பகுதியினரின் நம்பிக்கையையும் பெறக்கூடிய ஒரு தலைவரை உருவாக்க வேண்டிய அவசியத்தை ஸ்ரீ.ல.சு.கட்சித்தலைமை உணர்ந்துள்ளது. சந்திரிகா பண்டாரநாயக்கா இதற்கு ஏற்றவராகக் கருதப்படுகிறார். இவர் பண்டாரநாயக்காவின் புதல்வி என்பதுடன் இனவாதத்திற்கு எதிராகப்

போராடி சிறுப்பான்மை இனத்தலவர்களின் ஓரளவு நம்பிக்கையும் பெற்ற காலம் சென்ற விஜயகுமாரணதுங்காவின் மனைவியுமாவார். மேற்கூறிய சக்திகளை அணிதிரட்டக்கூடிய தன்மை கொண்டவராக சந்திரிகா விளங்குகின்றார். இதனால் ஸ்ரீலங்கா கம்யுனிஸ்ட் கட்சி, தனது ஸ்ரீ.ல.சு.கட்சியுடனான கூட்டுமுன்னணி முயற்சிகளுக்கு முன்னோடியாக சந்திரிகாவை முன்னணிக்குக் கொண்டுவர முயற்சித்தது.

விஜய் குமாரணதுங்கா கொலை செய்யப்பட்ட பின்பு சந்திரிகா ஐரோப்பா சென்றதுடன், இரு ஆண்டுகளாக இலங்கை அரசியலில் எந்தவித பங்களிப்பையும் செய்யவில்லை. அத்துடன் அங்கிருந்து, 1988 ஜனாதிபதித் தேர்தலில் ஒரு அபேட்சகரை நிறுத்த வேண்டாமென தனது (ஸ்ரீ.ல.ம.மு) கட்சிக்கும் இடதுசாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தார். விஜய குமாரணதுங்கா உயிரோடு இருந்த போதும், ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் ஒரு சமரசத்திற்கு வரும்வகையில் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தார்.

மேதினத்தில், ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி தமது கூட்டு முன்னணி கோரிக்கையை முன்வைக்க இருந்தது. ல.ச.ச.கட்சி தளம்பிக் கொண்டிருந்தது. சந்திரிகா அவ்வாறான ஒரு கூட்டுமுன்னணியை ஆதரித்துப் பேசினார். இது தொழிலாள வர்க்க சக்திகளை இனவாத முதலாளித்துவ சக்திகளுடன் இணைக்கும் சதிமுயற்சியாகும்.

நவசமசமாசக்கட்சி இதற்கெதிரான இயக்கத்தை ஆரம்பித்துள்ளது. தென் மாகாணங்களில் ல.ச.ச.கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சியுடன்

www.padippakam.com

இணைவதற்கு பலத்த எதிர்ப்பு இருந்து வருகிறது. இதனால் ல.ச.ச.கட்சியும் ஸ்ரீல.க.கட்சியும் மேதினத்தை ஐக்கிய சோசலிச முன்னணியின் பதாகையின் கீழ் கொண்டாடினார்கள்.

சந்திரிகா இலங்கைக்குத் திரும்பியதால் உற்சாகமடைந்த ஸ்ரீல.கம்யுனிஸ்ட் கட்சி' ஐக்கிய சோசலிச முன்னணியின் மேதினத்தில் (ஸ்ரீல.ம.மு.யிலிருந்து பிரிந்து சென்ற' சந்திரிகாவின் ) ஸ்ரீல.ம.மு(வி)யும் அழைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தத் தொடங்கியது. ஸ்ரீல.ம.மு. இதை நிராகரித்து தனியான மேதினக் கூட்டத்தை நடாத்தத் தீர்மானித்தது. ஆனால் மற்றைய கட்சிகள் ஐக்கிய சோசலிச முன்னணியின் பதாகையின் கீழ் மேதினத்தைக் கொண்டாடுவதை அது ஆட்சேபிக்கவில்லை. ஸ்ரீல.கம்யுனிஸ்ட் கட்சி ஸ்ரீல.ம.மு(வி)யின் தலைவியான சந்திரிகா ஐ.சோ.மு. மேதினத்திற்குத் தலைமை தாங்க வேண்டுமென்று முன்மொழிந்தது. முதலாளித்துவத்தின் பார்வையில் ' சந்திரிகா ஐ.சோ.மு.க்கும் ஸ்ரீல.க.கட்சிக்கும் இடையிலான பாலமாகவே இருந்தார்.

### மூன்று மேதினக் கூட்டங்கள்.

மற்றைய இடதுசாரிக்கட்சிகளின் பிற்போக்குவாத கூட்டு முன்னணிக் கொள்கைகளையும்' ஸ்ரீல.ம.மு.யின் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தையும் அம்பலப்படுத்தும் முகமாக நவசமசமாசக்கட்சி தனியான மேதின ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்தத் தீர்மானித்தது. மூன்று கூட்டுமுன்னணிக்கு ஆதரவான கடசிகளின் (ஸ்ரீல.க.க.' ல.ச.ச.க.' 'மிலிட்டன்ட்'குழு) கூட்டத்தில் 7000 பேரும்' கூட்டுமுன்னணிக்கு எதிரான ஸ்ரீலங்கா மக்கள் முன்னணி



படிப்பகம்

www.padippakam.com

ஊர்வலத்தில் 15,000 பேரும், கூட்டத்தில் 50,000 பேரும் கலந்து கொண்டார்கள் ('சிலோன் டெயிலி நியூஸ்'). நவசமசமாசக்கட்சியின் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் சுமார் 4500 பேர் கலந்து கொண்டனர். இது தொழிலாள வர்க்கத்தின் கூட்டுமுன்னணி எதிர்ப்புத் தன்மையைக் காட்டியது. ... ல.ச.ச.கட்சி, ஸ்ரீல.சு.கட்சி, ஸ்ரீல.ம.மு.(வி) ஆகியவை எதிர்வரும் பட்டினசபைதேர்தல்களுக்கு ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகின்றன.

'ஹேவ்லொக்' 'மயூராகாமன்ஸ்' ஆகிய ஸ்தாபனங்களில் ஸ்ரீல.சு.கட்சியின் தொழிற்சங்கங்களிலிருந்து தொழிலாளர்கள் ந.ச.ச.கட்சி நோக்கி நகர ஆரம்பித்துள்ளார்கள். ஸ்ரீல.சு.கட்சியிலும் பார்க்க அதிக தொழிலாளர்களை ந.ச.ச.கட்சி தனது மேதினத்தில் கவரக் கூடியதாக இருந்தது. ந.ச.ச.கட்சியின் செல்வாக்கும் அதிகரித்து வருகிறது. இது வருங்காலத்திற்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

ஏகாதிபத்திய ஆதரவான யு.என்.பி.க்கு எதிரான சகல வெகுசனப் போராட்டங்களையும் குழுவாத தன்மையில்லாமல் ஆதரிக்கவும், தொழிலாளர்களுக்கெதிரான எந்தவொரு முதலாளித்துவ சக்திருடனான கூட்டுமுன்னணியையும் எதிர்க்கவும், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக இடைவிடாத போராட்டத்தை முன்னெடுக்கவும், சகல ஜனநாயக சக்திகளையும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் அணிதிரட்டவும் சங்கற்பம் பூண்டுள்ளது. இவைகளே ஸ்ரீலங்கா இடதுசாரிகளினது, முக்கியமாக 'ட்ரொட்ஸ்கிய' வாதிகளினது கடமையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

*(continued from inside front cover)*

single group can rule the people. Therefore it is absolutely necessary for the "tigers" to perpetuate a political situation in which people live under a fear of war and their cadres are armed. Their imperialist masters too require this.

On the otherhand, Srilankan government, which refuses to accept the fundamental rights of the Tamil speaking people wants to keep them under armed suppression. It is also necessary for the government, under the preveiling economic situation, to suppress any opposition from the Sinhala people and misdirect them from the real issues with racial propaganda. Therefore an armed conflict is necessary for the government.

Those who expected their rights or the economic salvation from this government were cheated and will be cheated.

It is necessary for the people to reject these two fascist forces and to assist in building a united front of the progressive forces, that would accept the right of self determination of the Tamil people and work for peace and democracy in Srilanka.

படிப்பகம்

www.padippakam.com

# அவர்களிடம் சட்டப்புத்தகங்கள்

அவர்களிடம்
சட்டப் புத்தகங்கள், ஒழுங்கு விதிகள்
மறியற் சாலைகள், தடுப்பு முகாம்கள்
(இன்னும் பலவற்றை எண்ணாமல் விடுவோம்)
எதற்குந் தயாராய்
நிறையவே பணம் பெறும் நீதிபதிகள்
சிறைக் கதவாளிகள்.
எல்லாம் எதற்கு ?
எங்களை ஒடுக்கி
அழிக்கவும் நினைப்போ !

- பேர்ரோல்ட் ப்பிறெஷ்ட்

ஜேர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில் :- சி.ந.சு.

*Die haben Gesetzbücher*
*und Verodnungen*
*Sie haben Gefängnisse*
*und Festungen*
*(ihre Fürsorgeanstatten*
*Zählen Wir nicht)*
*Sie haben Gefängnis-*
*Wärter und*
*Richter*
*die viel Geld*
*bekommen und zu*
*allem bercit sind*
*ja, wozu denn?*
*Glauben sie denn, daß sie uns*
*damit kleinleriegen*

*- BRECHT -*

